விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 24
ஒலி 124 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 09 சனிக்கிழமை (22.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை

# அனைவரது கருத்தையும் ஏற்று அனுமதியுங்கள்

## நீதி அமைச்சருக்கு மகாநாயக்க தேரர்கள் உபதேசம்

(கொழும்பு)

அனைவரதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை கருத்திற் கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை அனுமதிப்பது பொருத்தம் என மகாநாயக்க தேரர்கள் நீதி அமைச்சருக்கு உபதேசித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டை அத்தியாவசிய சேவையாக்க கட்சிகள் இணக்கம்

03ஆம் பக்கம் பார்க்க

## பணவீக்கம் குறைந்தது

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், மார்ச் மாதத்தில் பணவீக்கம் கணிசமாகக் குறைவடைந் துள்ளது.

பெப்ரவரியில் 53.06 வீத மாக காணப்பட்ட பணவீக்கம், மார்ச் மாதத்தில் 49.2 வீதமாக குறைவடைந்துள்ளது.

தொகைமதிப்பு 15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; 4ஆம் ஆண்டு நினைவேந்தல்



15

## புதிய பயங்கரவாத சட்டத்தில் ஜனநாயக கூறுகளை உள்ளடக்குக

### மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள புதிய பயங்கரவாத சட்டத்தில் ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளை உள்ளடக்குங்கள் என மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப் பியுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் விளக்கமளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகாநாயக்க தேரர் கள் கடிதம் ஒன்றை 15

## நீதிக்காக காத்திருப்பவர்களுக்கு அமெரிக்க ஆதரவாக உள்ளது

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக் கப்பட்டு நீதிக்காக காத்தி ருப்பவர்களிற்கு அமெரிக்கா ஆதரவாகவுள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித் துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலால் பாதிக்கப் பட்டவர்கள் அவர் 15

## திடீர் சுகவீனம் காரணமாக 12 வயது சிறுமி மரணம்

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

திடீர் சுகவீனம் காரணமாக 12 வயது சிறுமி ஒருவர் நேற்று மரண மடைந்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் கிராம அலுவலர் பிரிவில் 15

## அதிகாரம் கிடைத்தால் நீதி கிடைக்கும்

### சஜித் பிரேமதாஸ

(கொழுமபு)

அதிகாரம் கிடைத்ததும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி யைப் பெற்றுக் கொடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 04

## புதுக்குடியிருப்பில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட குழந்தை இயேசு கோவில் - வற்றாப்பளை வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் குடும் பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

கைவேலி புதுக்குடியிருப் பினை சேர்ந்த 49 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தை யான சந்தியா பரமேஸ்வரன் என்பவரே சம்பவத்தில் உயிரி ழந்துள்ளார்.

[illegible] 15

## பல்தேசிய நிறுவனங்கள் இலங்கைக்கு உதவவுள்ளன

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வொஷிங்டனில் நடைபெற்ற வசந்த கால அமர்வுகளில் பங்கேற்ற பல் தேசிய நிறுவனங்கள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 27.03.2023 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் கந்தையா இரகுநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (24.04.2023) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (26.04.2023) புதன்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-6399)

கச்சாய் வடக்கு,
கொடிகாம்.

077 402 9467

தகவல்
குடும்பத்தினர்

# சேவைநயந்து வாழ்த்துகின்றோம்

## திருமதி சிவசோதி யோகநாதன்

(பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி (ஆசிரியை)
SLTS - I



### சேவை விபரம்

- யா/குடமியின் அ.த.க.பாடசாலை
  21.10.1988 - 04.02.1991 வரை
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  05.02.1991 - 31.12.1992 வரை
- யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை
  01.01.1993 - 28.05.1996 வரை
- வ/தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம்
  29.05.1996 - 22.06.1997 வரை
- மு/யோகபுரம் மகா வித்தியாலயம்
  23.06.1997 - 05.09.2002 வரை
- யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை
  06.09.2002 - 24.02.2010 வரை
- யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம்
  25.02.2010 - 22.04.2018 வரை
- யா/வரணி வடக்கு அ.த.க.பாடசாலை
  23.04.2018 - 21.04.2023 வரை

இன்றுடன் 34 ஆண்டுகள் ஆசிரியப் பணியினை நிறைவு செய்து எமது பாடசாலையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியை எல்லா நலனும் பெற்று நிறைவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

(C-6404)

ஆசிரியர் கழகம்
யா/வரணி வடக்கு அ.த.க.பாடசாலை, வரணி.


செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில்
சகல செல்வங்களும் பெற்றிட பிரார்த்திப்போம்

செல்வத்தை பெருக்கி சௌபாக்கியத்தை வரமாக்கும் அட்ஷய திருதியை
எனும் நன்நாளைக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கின்றது.

ஸ்ரீ குமரன் நகை மாளிகை
Sree Kumaran Jewellers

அட்ஷய திருதியை தினமான இன்று (22.04.2023)
கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு விசேட விலைக்கழிவு
வழங்கப்படும் என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்.

இல. 74, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

021 226 4465
077 873 3482








(C-6403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பாவிற்கு விற்கப்படும் இலங்கை சிசுக்கள்

# இன்டர்போல் பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை சிசுக்கள் ஐரோப்பாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இன்டர்போல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இலங்கைக் குழந்தைகளை விற்கும் மோசடியை நடத்தி வந்த மலேசிய தம்பதியரை அந்நாட்டு குடிவரவு அதிகாரிகள் கைது செய்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது.

60 முதல் 80 டொலர்களுக்கு இந்தக் குழந்தைகள் விற்கப்பட்டுள்ளன. மலேசிய கடவுச்சீட்டைக் கொண்ட இலங்கைக் குழந்தைகள் 6000 முதல் 8000 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 4000 இலங்கை சிசுக்கள் நெதர்லாந்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இன்டர்போல் தெரிவித்துள்ளது.

கடத்தலில் ஈடுபட்ட தம்பதிகள் இலங்கைக் குழந்தைகளுக்கான மலேசிய கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்கச் சென்றபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

## நாட்டை நாசமாக்கிய மகிந்தவுடன் ஒருபோதும் இணையமாட்டோம்

### விமல் அறிவிப்பு



(கொழும்பு)

"நாட்டை நாசமாக்கிய மகிந்த தலைமையிலான அணியுடன் ஒருபோதும் இணையமாட்டோம்" என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. அது தான் முக்கியம்.

நாங்கள் இடம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. கொள்கைதான் முக்கியமே தவிர இடமல்ல. இது எமக்கு சாதகமான கொள்கை அல்ல. இதனால் எதிரிகள் அதிகம் வளருவார்கள். எதிர்ப்புகள் கூடும். எமக்கு எதிரான தாக்குதல்கள் கூடும். உயிர் ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

நாட்டை நாசமாக்கிய மகிந்த தலைமையிலான அணியுடன் இணையமாட்டோம். அது ஒருபோதும் நடக்காது என அவர் தெரிவித்தார். (நி)

## தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும்

### சாகர காரியவசம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல்கள் மூலம் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொர்ட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் என அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால் அதில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். தற்போதுள்ள அரசாங்கத்தில் மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 4 அமைச்சர்கள் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களாக உள்ளனர். அதனால் இதுவும் ஒரு தேசிய அரசாங்கம்தான் என அவர் தெரிவித்துள்ளார்.



எதிர்காலத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல்கள் மூலம் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (நி)

## வியட்நாமிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ள மேலும் 23 இலங்கையர்கள்

(கொழும்பு)

வியட்நாமிலிருந்து மேலும் 23 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

வியட்நாமில் படகு ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் ஒரு தொகுதியினரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் இந்தப் படகு மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மீட்கப்பட்ட இலங்கையர்களில் 151 பேர் கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

கடந்த புதன்கிழமை நாடு கடத்தப்பட்ட மேலும் 23 பேரில் ஆறு பெண்கள் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## இலங்கையை வந்தடைந்த இந்தியாவின் முட்டைகள்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மில்லியன் முட்டைகளை ஏற்றிய மற்றுமொரு கப்பல் நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்தது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அதன் மாதிரிகளை எடுக்கவுள்ளதாக அரச வர்த்தக பல்வேறு சட்ட ரீதியான கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

இதன்படி, இந்தியாவிலிருந்து 60 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. (நி)

## 40 வயதிற்கு மேற்பட்ட

## பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கும் அடையாள அட்டை-ஆட்பதிவு திணைக்களம்

(கொழும்பு)

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாமல் இருக்கும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன், பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை பெறாத 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

## பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டை அத்தியாவசிய சேவையாக்க கட்சிகள் இணக்கம்

(கொழும்பு)

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க கட்சிகள் இணங்கியுள்ளன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க கட்சித் தலைவர்கள் இணங்கியதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் அத்தியாவசிய சேவை குறித்த பாராளுமன்ற விவாதத்தில் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கை குறித்தும் பேசப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென கட்சித் தலைவர்கள் இணங்கியதாகவும் தேவை ஏற்பட்டால் அந்தப் பணியை அத்தியாவசிய சேவையாக அறிவித்து மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் மாணவர்களை பணயக் கைதிகளை வைத்து தங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க சிலர் முயற்சிப்பதாக இந்தக் கூட்டத்தில் விமர்சனங்கள் எழுந்ததாகவும் தெரிவித்தார். (நி)

## அதிக வெப்பத்தால் ஏற்படும் மனநல நோய்கள்-மருத்துவர் ரூபி

(கொழும்பு)

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் மன உளைச்சல் உள்ளிட்ட மனநல நோய்கள் அதிகரிக்கலாம் என மனநல மருத்துவர் ரூபி ரூபன் தெரிவித்தார்.

இதனால் மக்கள் வன்முறைக்கு உள்ளாக நேரிடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மனநோய்களுக்கு மருந்து உட்கொள்பவர்களுக்கு தாகம் குறைவதாகவும் அதனால் அவர்கள் நீர்ச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிக வெப்பமான காலநிலை காரணமாக குழந்தைகளின் சிந்திக்கும் திறன் குறைவடையக்கூடும் எனவும் இதனால் பிள்ளைகளுக்கு கல்விச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலை மே இறுதி வரை நீடிக்கும் என வானிலை ஆய்வு நிலையம் கணித்துள்ளது. (நி)

## பயங்கரவாத தடைச்சட்டத்தை தோற்கடிப்போம்

### *எதிர்க்கட்சி*

(கொழும்பு)

மகாசங்கத்தினர், சர்வமதத் தலைவர்கள், பல் இன அமைப்புகள் மற்றும் சிவில் சமூகம் உட்பட பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராகவுள்ளதாகவும், [illegible] தேரர் கூட இச்சட்டம் மிகவும் பயங்கரமான சட்டம் என குறிப்பிட்டுள்ளார் எனவும், அந்த அறிக்கையை தானும் ஏற்றுக்கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

[illegible] பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடாக கொண்டுவரும் அரச மிருகத்தனம் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிப்பதே இந்த் அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக அமைந்துள்ளது.

இந்நோக்கத்தை முறியடிக்க அனைத்து முற்போக்கு சக்திகளையும் திரட்டி வருவதாகவும், பாராளுமன்றத்தில் ஜனநாயகத்தை போற்றும் அனைவரும் இணைந்து இதனை முறியடித்து பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கம் அமுல்படுத்தவுள்ள இந்த சர்வதிகார எதேச்சதிகார சட்டத்தை முற்றாக தோற்கடிக்கத் தயார் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி



ஐதராபாத்துக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னையில் நேற்று இரவு நடைபெற்ற 28வது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின.

டாஸ் வென்ற சென்னை அணி பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 134 ரன்கள் மட்டுமே எடுத்தது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 34 ரன்கள் எடுத்தார். சென்னை அணி சார்பில் ஜடேஜா 3 விக்கெட்டும் ஆகாஷ் சிங், தீக்ஷனா, பதீரனா தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 135 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெய்க்வாட், டேவன் கான்வே இறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தனர். முதல் விக்கெட்டுக்கு 87 ரன்கள் சேர்த்த நிலையில் ருதுராஜ் 35 ரன்னில் அவுட்டானார். அடுத்து வந்த ரகானே 9 ரன்னிலும், ராயுடு 9 ரன்னிலும் வெளியேறினர். மறுபுறம் கான்வே அதிரடியாக ஆடி அரைச் சதமடித்தார்.

இறுதியில், சென்னை அணி 3 விக்கெட்டுக்கு 138 ரன்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. கான்வே 77 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் நடப்பு தொடரில் சென்னை அணி 4வது வெற்றியைப் பதிவு செய்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ஜடேஜா தெரிவானார். (ம-7,9)

## சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா

கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா இன்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்களும் 5.30 மணிக்கு திருப்பலி நடைபெறும். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (ம-7,9)

## அதிகாரம்...

பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 4 வருடங்கள் கடந்தும் இதுவரை எந்த வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும், இந்த தாக்குதல் தொடர்பில் இதுவரையில் எந்த ஒரு குறிப்பிட்ட தகவலையும் வெளிக்கொணர முடியாது போயுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இரகசிய நிகழ்ச்சி நிரல் இருப்பதாகவும், அதனை மூடி மறைக்க சில தரப்பினர் முயற்சிப்பதாகவும், இதனால் குறித்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு பலவேறு தரப்பினரின் தலையீடு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன், சுயாதீன விசாரணையின் மூலம், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மற்றும் தரப்பினருக்கு தகுதி அந்தஸ்து பாராமல் தண்டிக்கப்படுவார்கள் எனவும், சுயாதீன தேசிய மற்றும் சர்வதேச விசாரணையின் பிரகாரம் அமையும் இந்த நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட எவரையும் தப்பிக்க இடமளிக்கமாட்டோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7,9)




இரணைமடு

திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

**கடைகள் வழங்கல்**

இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் 2023ஆம் ஆண்டுக்கான திருவிழா கால கடைகள் வழங்கல் 23.04.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.

(C-6405)

ஆலய நிர்வாகம்


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 02 - 1939



மறைவு 21 - 04 - 2023

### செல்வி அமிர்தலிங்கம் பவளமலர்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அமிர்தலிங்கம் பவளமலர் அவர்கள் நேற்று (21.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான எஸ்.தவமலர், தி.பொன்மலர் மற்றும் அ.சிவலிங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2023) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிவலிங்கநாதன்
(Retired Cashier)
Jaffna Co-Op Stores Ltd

(15331)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 12 - 1954



மறைவு 20 - 04 - 2023

### கந்தையா தேவராசா (சந்திரன்)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தேவராசா அவர்கள் 20.04.2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் தர்ஷினி (ஜேர்மனி), குமுதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று, முல்லைத்தீவு), யாழினி (தென்.கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிக்குமார் (ஜேர்மனி), ஜெயகாந்த் (அதிபர் - மு/வலைஞன்மடம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவிஷாணன், பார்கவி, டருணிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைபறிச்சான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(15329)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரிபால சிறிசேனவை சிறையிலடைக்க வேண்டும்

### சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

பலவீனமான ஆட்சியாளர்களும் பாதுகாப்புப் படை பிரதானிகளும் இருக்கும் வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இனங்காண முடியாது.

எவ்வாறிருப்பினும் இதனை வருடக் கணக்கில் காலம் தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்தோடு இழப்பீடு செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு போதாது என்றும் அவர் சிறையிலடைக்கப்பட வேண்டும் என்றும் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 21 ஆம் திகதியுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பேலியகொடையில் இடம்பெற்ற அமைதியான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இது அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இடம்பெற்ற சம்பவம் என்று நாம் நம்புகின்றோம்.

பிரபாகரனின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நாம் ஏற்கனவே பதிலளித்து விட்டோம். இராணுவத்தினரால் அந்த செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளன. அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித அக்கறையும் அற்ற ஆட்சியாளர் இருந்தால் மாத்திரமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இனங்காண்பதில் வருடக்கணக்கில் காலம் செல்லும். இது பலவீனமான பாதுகாப்பு அதிகாரிகளின் நிலைப்பாடாகும். அவ்வாறு காலம் கடத்துவதற்கு இடமளிக்க முடியாது.

ஆட்சியாளர்களும் பாதுகாப்புப் படை பிரதானிகளும் சிறப்பாக செயற்பட்டால் சூத்திரதாரிகளை இலகுவாக இனங்காணலாம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முட்டாள்த்தனமான கருத்துக்களுக்கு எம்மால் பதிலளிக்க முடியாது.

அவரை சிறையிலடைக்க வேண்டும். இழப்பீடு வழங்குமாறு அளிக்கப்பட்ட தீர்ப்பு போதுமானதல்ல என்பதே எனது நிலைப்பாடாகும். அவருக்கு இதனை விட கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். (நி)


# University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake VII – 2021/2022

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake VII) - 2021/2022 and invites applications for the admission from qualified candidates. Details of the course can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: www.maco.jfn.ac.lk.

**Admission requirement**

A candidate seeking admission to MBA should possess at least any one of the following qualifications and exhibit a satisfactory level of English language proficiency:

1) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in Business/ Public Administration/ Business Management/ Commerce/ Business Administration/ Management Studies
2) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution including 30 credits in Business/ Public Administration/ Economics/ Commerce/Management studies
3) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline **and**

   A Postgraduate Diploma in business/public administration//business management/ commerce/business administration/ management studies
4) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline **and**

   A minimum of one-year post qualifying work experience in a management capacity at an organization acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna
5) Having at least one of the approved list of professional qualifications ( for details please visit: https: // www.maco.jfn.ac.lk/index.php/mba/),with a minimum of three (03) years post-qualifying work experience in a management capacity at the organization(s) acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna
6) Any other qualification/experience acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna

**PROGRAMME STRUCTURE**

Duration - Two years (Four (04) Semesters)
Medium of instruction - English

**INVESTMENT**

Investment for the MBA program is Four Hundred and Fifty Thousand (LKR 450,000.00). This can be invested in two installments as given below:

| | | |
|---|---|---|
| Application | : | LKR 2,000 |
| First Year Investment | : | LKR 250,000 |
| Second Year Investment | : | LKR 200,000 |

**The closing date for application: 28.05.2023**

**APPLICATION PROCEDURE**

Online Application form, Procedure and Paying in voucher can be found from the website www.maco.jfn.ac.lk

Further information could be obtained through 021 221 6394 / 021 222 3610.

**Registrar,**
**University of Jaffna, Sri Lanka.**

(C-6401)


# இராசிபலன்

22.04.2023
சித்திரை 09, சனிக்கிழமை
துதியை முற்பகல் 9.14 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 12.48 மணிவரை

சுபநேரம் -3.01-4.31 மணிவரை
இராகுகாலம்-9.01-10.31 மணிவரை
கார்த்திகை விரதம், றமழான் பண்டிகை, அட்சய திருதியை

சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

**வளவன்**

**மேஷம்** — காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, வேலைச்சுமை கூடும் நாள், பிரயாண பயமுண்டு.

**மகரம்** — பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்ற முற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** — உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல் நலன் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, பணம் பற்றிய கவலை தீரும்.

**சிம்மம்** — குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** — உறவினர் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** — நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அக்கறை கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** — எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சய விரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பயணங்கள் கை[illegible]ப்புண்டு.

**தனுசு** — இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், வியாபார விரோதம் விலகும், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும், பகை விலகி பாசம் கூடும், வருமானம் திருப்தி தரும்.

கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் யாழில் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதன்போது, குண்டு வெடித்த நேரமான 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

நினைவேந்தலில் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (4-6-33)

# மக்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படும்

## யாழ். போதனா பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மக்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே வைத்தியசாலை கழிவு எரியூட்டி அமைக்கப்படும் என யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தரப்பு விளக்கமளித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான பொறிமுறையை தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் முன்னெடுக்க முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் பிரதேச மக்கள் பிரதிநிதிகளுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் இடையிலான கூட்டம் நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.



இதன்போது, வைத்திய சாலை தரப்பிலிருந்து, குறித்த எரியூட்டி அமைக்கப்படும் பொறி முறை மற்றும் அதன் செயற் பாடுகள் தொடர்பாக மக்களின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக் கப்பட்டது. குறித்த எரியூட்டி அமைப்பதற்குரிய பங்குதாரர்களுடனான சந்திப்பொன்றை நடத்தி அதனைத் தொடர்ந்து மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார். மேலும், பிரதேச மக்களின் அனுமதியின்றி இத்திட்டத்தை மேற்கொள்வதில்லை என்றும் வைத்தியசாலைக் கழிவுகளை எரிப்பதற்கு பொருத்தமான பிறிதொரு இடத்தை தெரிவு செய்து பரிசீலிக்கவுள்ளதாகவும் அவர் இச்சந்திப்பின் போது தெரிவித்தார். (4-6-33)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம் (Human Resource Management) குறுகிய காலக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10.05.2023 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# குருப்பெயர்ச்சி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் குருப் பெயர்ச்சிஹோமம் நடைபெறும் என ஆலய பிரதமகுரு சிவாஸ்ரீ கா.துரைச்சாமிக் குருக்கள் அறிவித்துள்ளார். (4-6)

# யாழ்.மரபுரிமை மையத்தின் தலைவராக பேராசிரியர் புஸ்பரட்ணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

அதன்போது யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவராக வரலாற்றுத்துறை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இவ் மையத்தின் உபதலைவர்களாக வி.மணிவண்ணன், சி.தனுஜன், செயலாளராக ரர்.ரமேஸ், துணைச் செயலாளராக வி.மணிமாறன், பொருளாளராக ந.சுகிதராஜ், பதிப்பாசிரியராக வ.பார்த்திபன், இணைப்பாளராக பேராசிரியர் செ.சந்திரசேகரம் மற்றும் மையத்தின் உறுப்பினர்களாக வைத்திய கலாநிதி பேராசிரியர் சு.ரவிராஜ், பா.கபிலன், பு.ஆரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் காணப்படும் சங்கிலியன் தோரண வாசல் இவ் மையத்தினால் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றமையும் அது ஓரிரு வாரங்களுக்குள் திறந்து வைக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-33)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள பாவிக்க முடியாத நிலையிலுள்ள கட்டிடம் மற்றும் பாவித்த கல்வனைசு தகரப்பெட்டிகள் என்பன பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய கட்டிடம் மற்றும் பொருட்கள் தொடர்பான விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் சேவைகள் பிரிவு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கீழ்குறித்த தினத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 03.00 மணிவரை மட்டும் பார்வையிடலாம். (தொடர்பு இலக்கம்- 021 221 8128)

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | இல-354, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதியில் பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக) | • பாவிக்க முடியாத நிலையிலுள்ள பழைய வீடு (கூரை தொடக்கம் நில மட்டம் வரை)<br>• பாவித்த கல்வனைசு தகரப் பெட்டிகள் | 03.05.2023 புதன்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை | 10.05.2023 புதன்கிழமை காலை 10.00 மணி |

ஏலவிற்பனையில் பாவிக்க முடியாத நிலையிலுள்ள வீடு மற்றும் பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத அனுமதிக் கட்டணமாக ***ரூபா 3000.00ஐ*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***970000060000276*** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டுடன் ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் 08.05.2023 திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா **100,000.00 ஐ** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***970000440002612*** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டினை பொதுநிர்வாகக் கிளையில் கையளித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து மேற்குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***970000440001846*** என்ற கணக்கிலக்கத்திற்கு பணமாக உடன் செலுத்தி குறித்தொதுக்கப்பட்ட தினங்களுக்குள் ஏலவிற்பனை நிபந்தனைகளுக்கமைவாக வீட்டினையும் பொருட்களையும் அகற்றுதல் வேண்டும்.

**குறிப்பு: மீளளிப்புச் செய்யக்கூடிய தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றவர்கள் மாத்திரமே ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதையும் அறியத் தருகின்றோம்.**

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-6400)


# கடற்கரை சுத்தம் செய்தல்

(யாழ்ப்பாணம்)

Ocean Conservancy மற்றும் Earthlanka Youth netwok அனுசரணையுடன் பூமி தினத்தை முன்னிட்டு கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது நாளை மறுதினம் 24 ஆம் திகதி அன்று குருநகரில் (வீட்டுத் திட்ட அடுக்குமாடி குடியிருப்பு முன்) காலை 7.30 முதல் 9 மணிவரை நடத்த திட்டமிடப்பட் டுள்ளது என யாழ்.அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (4-6)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.18 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

இன்று முதல் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் சு.மு.விஜயநிர்மலா வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை

# சட்டத்திற்கு முன்நிறுத்துமாறு கோரி மனிதச் சங்கிலிப் போராட்டம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களின் உண்மைத்தன்மையை கண்டறிந்து, மிலேச்சத்தனமான செயலை செய்த சூத்திரதாரிகள் மற்றும் குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டும் எனத் தெரிவித்து நேற்று மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று 4 ஆண்டுள் நிறைவடைகின்றது.

இந்நிலையில், இன,மத, மொழி, கட்சி வேறுபாடின்றி ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்களை நடத்தியவர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வரவேண்டுமெனத் தெரிவித்தும் குண்டுத்தாக்குதல்களில் பலியான மற்றும் படுகாயமடைந்தவர்களை நினைவுகூர்ந்தும் நேற்று காலை 8.30 மணி முதல் காலை 9 மணி வரை நீர்கொழும்பு - கொழும்பு வீதியின் இருமருங்கிலும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எஞ்சிய அமைச்சுப் பதவிகளுக்கு 10 இற்கு மேற்பட்டோர் போட்டி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் எஞ்சிய அமைச்சுப் பதவிகளுக்காக 10 இற்கும் மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர்.

அரசமைப்பின்படி 30 கெபினட் அமைச்சர்களையே நியமிக்க முடியும். அந்தவகையில், இன்னும் எஞ்சி இருப்பது 10 அமைச்சுக்கள் மாத்திரமே. அதற்கு 10 இற்கும் மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர்.

மொட்டுக் கட்சியில் இருந்து ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்நாயக்க, எஸ்.பி. திஸாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட 10 பேரின் பெயர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. அவர்களுள் அத்தனை பேருக்கும் பதவிகள் கிடைப்பது நிச்சயமில்லை.

மறுபுறம், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பலர் வரிசையில் நிற்கின்றனர். சுகாதார அமைச்சுப் பதவி தந்தால்தான் அரசுடன் இணைவேன் என்று கூறியுள்ளார் ராஜித.

தற்போது சுகாதார அமைச்சராக இருக்கும் கெஹலிய ரம்புக்வெல அந்தப் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்று தெரியவருகின்றது.

இந்தநிலையில் இரண்டு தரப்பிலும் 10 இற்கும் மேற்பட்டவர்கள் 10 பதவிகளுக்குப் போட்டியிடுவதால் போட்டி கடுமையாகவுள்ளது. (நி)

### சிறை செல்வதைத் தடுப்பதற்காகவே

# தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் அதீத அக்கறை காட்டும் மைத்திரி

## டிலான் பெரேரா

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு முன்பாகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார் என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தால் சிறை செல்வதை தடுப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அதிக அக்கறை கொண்டுள்ளார் என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

# மறுமை பயன்களை அடைய வழிகாட்டும் றமழான் நோன்பு

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.



முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம்.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன், பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும். எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும் பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் றமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுக, துக்கங்களில் பங்கு பற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக் கூடியதாக உள்ளது.

சமாதானமும சுகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத்தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக. மேலும் எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை நீங்கவும் அல்லாஹ் கிருபை செய்வானாக. ஆமீன்.

[illegible]
யாழ்ப்பாணம்.

### சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 250 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 300 |
| தக்காளி | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 180 | 180 | 180 | 240 |
| கரட் | 120 | 220 | 150 | 300 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 |
| புடோல் | 140 | 120 | 140 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 130 |
| பாகற்காய் | 350 | 300 | 100 | 300 |
| வெண்டக்காய் | 200 | 160 | 160 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 300 | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 240 | 200 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 400 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 240 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 50 |
| முள்ளங்கி | 100 | 100 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 120 | -- | 50 |
| வல்லாரை | 40 | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 130

# சுந்தர் பிச்சையின் கரப்பான் பூச்சி கதை



கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை தான் பங்கேற்கும் கூட்டங்களிலும் மாணவர் சந்திப்புகளிலும் சில சுவாரஸ்யமான விடயங்களை சொல்லி கூட்டத்தை திகைப்பில் ஆழ்த்துவார். அப்படிப்பட்ட ஒரு கதையைத்தான் சுந்தர் பிச்சை தான் படித்த கல்லூரியில் (ஐ.ஐ.டி. கான்பூர்) சொன்னார். அந்தக் கதை உலக அளவில் வைரலாக பரவியது.

கரப்பான்பூச்சி ஒன்றை மையமாக கொண்ட இந்த கதை படிக்கும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் வெற்றி குறித்த ஒரு தெளிவை உருவாக்கும் என்பது உண்மை.

"ஒரு நாள் ஹோட்டல் ஒன்றில் அமர்ந்து காபி குடித்து கொண்டு இருந்தேன். 'எனக்கு சற்று தள்ளி இருந்த டேபிளில் ஒரு நண்பர்கள் குழு அமர்ந்திருந்தது. அவர்களுக்குள் பேசியபடி உணவருந்தி கொண்டிருந்தனர்.

அப்போது எங்கிருந்தோ ஒரு கரப்பான் பூச்சி பறந்து வந்து ஒரு பெண்ணின் தோள் மீது அமர்ந்தது. உடனே, அந்த பெண்மணி கத்தி கூச்சலிட்டபடி எழுந்தார். அதிர்ச்சியில் உறைந்த முகத்துடனும் நடுங்கும் குரலுடனும் பதறியபடி கைகளை வீசி ஆடியபடி எழுந்து கரப்பான் பூச்சியை தட்டி விட முயற்சி செய்தார். சற்று நேர முயற்சிக்கு பிறகு அதை தட்டி விட்டுவிட்டார்.

ஆனால், அந்தப் பூச்சி கீழே விழாமல் அவர் பக்கத்தில் இருந்த மற்றொரு பெண்ணின் மீது போய் அமர்ந்து விட்டது. அந்த பெண்மணி இவரை விட அதிக குரலில் கத்தியபடி அந்த பூச்சியை விரட்ட முயற்சித்தார். சிறிது நேர முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

மீண்டும் அந்த பூச்சி பறந்து மற்றொருவர் மீது அமர்ந்து கொண்டது. இந்த முறை அது அமர்ந்த இடம் அந்த ஹோட்டலின் சர்வர் ஒருவரின் தோள்ப்பட்டை. அந்த பெண்களின் செயல்களுக்கு நேர் எதிராக எந்த பதற்றமும் இன்றி அந்தக் கரப்பான்பூச்சியின் நடமாட்டத்தை கவனித்து சரியான நேரத்தில் அதனை தன் கை விரல்களால் பிடித்து வெளியே எறிந்தார்.

இதனை பார்த்த நான் சிந்திக்க தொடங்கினேன். அந்த பெண்களின் செயல்களுக்கு காரணம் அந்த கரப்பான் பூச்சியா? இல்லை. அந்த பெண்களின் பயந்த சுபாவம் தான், அவர்களைப் பதற்றப்பட செய்துள்ளது. அதேநேரம் அந்த சர்வரின் தீர்க்கமான பதற்றமில்லாத சிந்தனையால் அவரால் சரியாக அந்தப் பூச்சியை பிடிக்க முடிந்தது.

அப்போது தான் எனக்கு புரிய தொடங்கியது. நம்மை வெளியில் நடக்கும் எந்த நிகழ்வும் நம் கட்டுபாட்டில் இருக்கும் வ்ரை நம்மை பாதிக்காது. நம்மால் எந்த சூழலையும் எதிர்கொள்ள முடியும். அதற்கு தேவை மனக் கட்டுப்பாடு தான். எந்த ஒரு விடயம் குறித்தும் உடனடியாக முடிவு எடுப்பதை விட சிந்தித்து முடிவு எடுப்பது தான் பயன் தரும்" என்றார்

இந்த கதை மூலம் அவர் கூறிய கருத்து எந்த ஒரு விடயத்திற்கும் உடனடி முடிவு எடுப்பதை விட சிந்தித்து முடிவு எடுப்பது தான் வெற்றிகரமான வாழ்க்கைக்கு சிறந்தது.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

## பாரதம்

# கொரோனா தொற்று காரண

# 67 மில்லியன் சிறா

# வழக்கமான தடுப்பூசிகளை இ

## யுனிசெப் நிறுவனம் தெரிவிப்பு

**(வோஷிங்டன்)**

**கொவிட் -19 காரணமாக 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உலகில் 67 மில்லியன் சிறார்களுக்கு வழக்கமான தடுப்பூசிகள் செலுத்தப்படவில்லை என யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

## உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக

# இந்தியா மாறும் - ஐ.நா தகவல்

(டில்லி)

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் சீனாவை பின்னுக்கு தள்ளி இந்தியா உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறும் என ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சீனாவில் 1,425.7 மில்லியன் சனத்தொகை காணப்படுவதாகவும் இருப்பினும் இந்தியாவின் மக்கள் தொகை1,428.6 மில்லியனை எட்டும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2011 க்குப் பிறகு நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு இல்லாததால், இந்தியாவின் மக்கள்தொகை எண்ணிக்கை ஒரு ஊகம் என்றும் கூறப்படுகின்றது.

இதேநேரம் தங்கள் மதிப்பீட்டில் சீனாவின் இரண்டு சிறப்பு நிர்வாகப் பகுதிகளான ஹாங்காங், மக்காவ் மற்றும் தாய்வான் மக்கள் தொகையும் இல்லை என்றும் அறிவித்துள்ளது.

எனினும், தாய்வான் தனது சொந்த அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடன் சீன நிலப்பரப்பில் இருந்து வேறுபட்டதாகக் கருதுகிறது.

கடந்த வருடம் நவம்பரில், உலக மக்கள் தொகை 8 பில்லியனைத் தாண்டியது.

எனினும், வளர்ச்சி முன்பு போல் வேகமாக இல்லை என்றும் 1950 இற்குப் பிறகு இப்போது மிகக் குறைந்த வேகத்தில் இருப்பதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர். (நி)

## மருத்துவமனையில் திடீர் தீ விபத்து 21 பேர் உயிரிழப்பு; 70 பேர் காயம்



(பீஜிங்)

சீனாவில் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் பீஜிங்கில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் போது 70 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## ரஷ்ய தாக்குதலில் அதிலிருந்து மீட்

(கீவ்)

ரஷ்யாவின் தாக்குதலில் தரைமட்டமான உக்ரைன் வைத்தியசாலையின் இடிபாடுகளிற்குள் இருந்து கர்ப்பிணியொருவரை மீட்புப் பணியாளர்கள் மீட்பதை காண்பிக்கும் அசோ சியேட்டட் பிரசின் புகைப்படத்திற்கு சர்வதேச விருது கிடைத்துள்ளது.

எவ்ஜெனி மலோலெட்கா என்ற ஏபி புகைப்படப்பிடிப்பாளருக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மார்ச் ஒன்பதாம் திகதி கடும் காயங்களிற்குள்ளான பெண்ணையும் அவரது இடது கை வயிற்றில் காணப்படுவதையும் காண்பிக்கும் படத்தினை ஏபி புகைப்படப்பிடிப்பாளர் எடுத்திருந்தார்.

உக்ரைனின் கிழக்குபகுதி துறைமுகநகரான மரியபோலில் பதிவு செய்யப்பட்ட இந்த படம் ரஷ்யாவின் யுத்தத்தின் கொடுமையை வெளிப்படுத்தும் விதத்தில் உயிரற்ற தனது குழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ணமாக ...ார்கள் இழந்தனர்

கொவிட் -19 பரவலைத் தடுப்ப தற்கான முடக்க நிலைகள் மற்றும் சுகாதார சேவைகளில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக, சிறார்க ளுக்கான ஏனைய வழக்கமான தடுப்பூசிகள் செலுத்தப்படுவது பாதிக் கப்பட்டதாக யுனிசெப் கடந்த புதன் கிழமை தெரிவித் துள்ளது. சிறுவர் நோய்த்தடுப்பு விடயத்தில் ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலப் பகுதியில் அடைந்த நன்மைகள் அழிந்துவிட்டன.

67 மில்லியன் சிறார்களு க்கு தடுப்பூசி ஏற்றுவது கடு மையாக பாதிக்கப்பட்டது. 48 மில்லியன் சிறார்கள் வழக்க மான தடுப்பூசிகள் முற்றாக கிடைக்கவில்லை எனவும், போலியோ மற்றும் தட்டம்மை நோய்ப்பரவல் சாத்தியங்கள் குறித்த கவலை ஏற்பட்டுள்ள தாகவும் யுனிசெப் தெரிவித் துள்ளது.

உலகளாவிய ரீதியில் தடுப் பூசி செலுத்தப்பட்ட சிறார்க ளின் சதவீதம் 81 சதவீதமாக குறைந்துள்ளது. 2008 ஆம் ஆண்டின் பின்னரான மிகக் குறைந்த சதவீதம் இது. 112 நாடு களில் சிறார்களுக்கான தடுப் பூசி செலுத்துதல் வீழ்ச்சிய டைந்துள்ளது. ஆபிரிக்கா மற் றும் ஆசியா கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளன எனவும் யுனி செப் தெரிவித்துள்ளது. (நி)

## நலத்திட்ட உதவிகளை வாங்க வந்த கூட்டத்தில் சிக்கி 78 பேர் உயிரிழப்பு

(சனா)



ஏமனில் நலத்திட்ட உத விகளை வாங்க வந்த கூட் டத்தில் சிக்கி 78 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரமழான் மாதத்தை முன் னிட்டு அந்நாட்டு தலைநகர் சனாவில் நலத்திட்ட உத விகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனுடன் பணம் உணவு மற்றும் அன்னதானம் வழங் கப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டிருந்தது. இதனைய டுத்து அங்கு ஏராளமா னோர் குவிந்தனர். சிறிது நேரத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் ஒருவர் மீது ஒருவர் தடுக்கி விழுந்தனர்.

இந்த நெரிசலில் சிக்கி 78 பேர் உயிரிழந்ததாக ஹவுதி தலைமையிலான நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் பெரும் பாலானவர்கள் குழந்தை கள் மற்றும் பெண்கள் என வும் கூறப்பட்டுள்ளது. (நி)

## சொந்த நகரத்தின் மீதே குண்டு வீசிய ரஷ்ய விமானங்கள்

### தவறுதலாக நடந்து விட்டதாக இராணுவம் அறிவிப்பு

(மொஸ்கோ)

சுகோய்-34 வகை விமானம் ஒன்று உக்ரைன் எல்லைக்கு தாக்குதல் நடத்த புறப்பட்டு சென்றது. விமானத்தில் இருந்து சீறி பாய்ந்த குண்டுகள் உக்ரைனுக்கு பதில் உக்ரைன் எல்லையில் உள்ள ரஷ்ய நகரமான பெல்கோரேட் நகர் மீது விழுந்தது.

ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தொடங்கியது. உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டு கடந்த பின்னரும் இன்னும் ஓயவில்லை. இப்போதும் தினம், தினம் தாக்குதல் நடந்த வண்ணம் உள்ளது.

நேற்று முன்தினம் உக்ரைன் மீது தாக்குதல் நடத்த ரஷ்யாவின் அதிநவீன போர் விமானங்கள் சீறிப் பாய்ந்தன. உக்ரைன் எல்லையில் குண்டு வீசுவதற்காக இந்த விமானங்கள் பறந்து சென்றன.

ஆனால் விமானத்தில் இருந்து சீறி பாய்ந்த குண்டுகள் உக்ரைனுக்கு பதில் உக்ரைன் எல்லையில் உள்ள ரஷ்ய நகரமான பெல்கோரேட் நகர் மீது விழுந்தது.

இதில் ரஷ்ய நகர் மீது தவறுதலாக தாக்குதல் நடந்து விட்டது தெரியவந்தது. இதனை ரஷ்ய இராணுவ உயர் அதிகாரிகள் அதிகார பூர்வமாக தெரிவித்தனர். (நி)

## சிங்கப்பூரில் மீண்டும் மரண தண்டனை மனித உரிமை ஆர்வலர்கள் சந்திப்பு

(சிங்கப்பூர்)

மரண தண்டனை நிறைவேற் றுவதை மீண்டும் தொடர அரசு முடிவு செய்துள்ளது. சிங்கப்பூரில் போதைப்பொருள் உள்ளிட்ட வழக் குகளில் மரண தண்டனை அதி கமாக நிறைவேற்றப்படுகிறது.

இதற்கு சர்வதேச அளவில் விமர்சனங்கள் எழுந்த நிலை யில், இதை அரசு மறுபரிசீலனை செய்து வந்தது.

இதனால் கடந்த 6 மாதங்க ளாக மரண தண்டனை நிறை வேற்றுவது நிறுத்தி வைக் கப்பட்டிருந்தது. இந்த நிலை யில் அங்கு மரண தண் டனை நிறைவேற்றுவதை மீண்டும் தொடர அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி போதைப் பொருள் கடத்த முயன்றதாக கடந்த 2014 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, 2018 ஆம் ஆண்டு மரண தண் டனை விதிக்கப்பட்ட தங் கராஜு சுப்பையா (வயது 46) என்பவருக்கு வருகிற 26 ஆம் திகதி தூக்குத் தண் டனை நிறைவேற்றப்படு கிறது.

சிங்கப்பூர் அரசின் இந்த முடிவுக்கு மனித உரிமை ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரி வித்து உள்ளனர்.

தங்கராஜுவை தூக்கு கயிற்றில் இருந்து காப்பாற்ற இறுதி வரை போராட உள் ளதாக அவர்கள் தெரிவித்து உள்ளனர். (நி)

## ...ல் தரைமட்டமான மருத்துவமனை ...மீட்கப்படும் கர்ப்பிணிப் பெண்



...தையை பிரசவித்த பின்னர் அந்த பெண் உயிரிழந்தார்.

இது நான் மறக்க விரும்புகின்ற தருணம். ஆனால் என்னால் மறக்க முடியவில்லை என மலோலெட்கா விருது குறித்த அறிவிப்பு வெளியா வதற்கு முன்னர் பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

நான் மறக்க முயல்கின்றேன் ஆனால் முடியவில்லை இந்த அனு பவம் என்னுடன் என்றும் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மிகவும் கடுமையான சூழ்நிலை களின் மத்தியில் எவ்ஜெனி மலோ லெட்கா ரஷ்யா -உக் ரைன் யுத்தத்தின் மிகவும் தீர்க்கரமான படத்தை வெளி யிட்டார். அவரது தளராத துணிச் சல் இல்லாவிட்டால் ரஷ்யா வின் மிகவும் கொடூரமான தாக்குதல் ஒன்றை பற்றி அறிய முடியாமல் போயிருக்கும் அவர் குறித்து நாங்கள் பெருமிதம் அடைகின்றோம் என ... சிரேஷ்ட அதிகாரிகளில் ... தெரிவித்துள்ளார். (நி)

## உலக பணக்கார நகரங்களின் பட்டியலில் நியூயோர்க் முதலிடம்

(நியூயோர்க்)

உலக பணக்கார நகரங் களின் பட்டியலில் அமெரிக் காவின் நியூயோர்க் நகரம் முத லிடத்தை பிடித்துள்ளது.

இங்கு 3 இலட்சத்து 40 ஆயி ரம் மில்லியனியர்கள் வசிப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.

2 ஆவது இடத்தில் ஜப்பா னின் டோக்கியோ நகரம் உள் ளது. இங்கு 2 இலட்சத்து 90 ஆயிரத்து 300 மில்லினி யர்கள் வசிக்கிறார்கள். 3 ஆவது இடம் சான்பிரான்சிஸ்கோ நக ருக்கு கிடைத்துள்ளது.

இங்கு 2 இலட்சத்து 85 ஆயி ரம் மில்லியனியர்கள் வசிப்பதாக தெரிய வந்துள்ளது. உலக நாடுகளில் உள்ள மொத்தம் 97 நகரங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பியா உள்ளிட்ட நாடுகளின் நகர ங்கள் இடம்பிடித்து இருக்கி ன்றன.



அதிகபட்சமாக அமெரிக் காவைச் சேர்ந்த நியூயோர்க், லாஸ் ஏஞ்சல்ஸ், சிகாகோ, தி பே ஏரியா ஆகிய 4 நகரங் களும் அடுத்ததாக சீனாவின் பீஜிங், சாங்காய் ஆகிய நக ரங்களும் இடம்பிடித்துள்ளன. இந்த பணக்கார நகரங்களின் பட்டியலில், இந்தியாவும் இடம் பிடித்துள்ளது.

மும்பை, டெல்லி, பெங்க ளூரு, ஐதராபாத் ஆகிய 4 நகரங்கள் உள்ளதாக தெரிவி கப்பட்டு உள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கடும் காற்று

# 1500 பப்பாசிகள் அழிவு

## விவசாயிகள் கவலை

(குருமன்காடு)

**வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 1500 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும் பயன்தரு ஏனைய மரங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**



கடும் வெப்பத்திற்கு மத்தியில் வவுனியா வடக்கில் நேற்று முன்தினம் மாலை திடீரென கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

இதன்போது, வவுனியா வடக்கு ஓடைவெளி கிராமத்தில் வசிக்கும் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் காய்த்து அறுவடைக்கு சில வாரங்களே இருந்த 1500 பப்பாசி மரங்கள் காற்றில் முறிந்து விழுந்து அழிவடைந்துள்ளது.

அத்துடன், ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயிகள் பலரின் வாழ்வாதாரமாக இருந்த பப்பாசி, வாழை, புகையிலை, கத்தரி உள்ளிட்ட பயன்தரு மரங்களும் காற்றில் முறிந்து அழிவடைந்துள்ளன.

தமது வாழ்வாதரமாக மேற்கொண்ட பயிர்கள் அழிவடைந்தமை காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (4-6-250)



"நாட்டுக்கு மூச்சு தரும் உதயம்" எனும் தொனிப்பொருளில் கீழ் மாவட்ட ரீதியாக பழ மரக்கன்றுகள் நடுகை நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் மாந்தை கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# வடமாகாண வெசாக் பண்டிகை வவுனியாவில் கொண்டாட ஏற்பாடு

(குருமன்காடு)

வடமாகாண வெசாக் பண்டிகை வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

சித்தார்த்த கௌதமர் லும்பினி என்னுமிடத்தில் பிறந்த நாள், புத்தகயா எனும் இடத்தில் தவம் புரிந்து புத்த நிலை அடைந்த நாள் மற்றும் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த நாள் என்பவற்றை முன்னிறுத்தி வருடாந்தம் வெசாக் பண்டிகை பௌத்தர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், எதிர்வரும் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் இவ் வருடத்திற்கான வெசாக் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது.

அதன்படி வடமாகாணத்திற்கான வெசாக் பண்டிகை குறித்த திகதிகளில் வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள போதி தக்ஷினாராமய விகாரையில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட மாகாணத்தின் உயர்மட்ட அதிதிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.(4-6-250)



விவாசாய அமைச்சின் ஏற்பாட்டில் "பழம் தரும் பல்லாண்டுப் பயிரை பயிரிடுவோம்" திட்டம் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த திட்டத்தின் கீழ் வவுனியாவில் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் நேற்று மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

(பட்ம்:-வசந்தரூபன்)

# எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை வழங்க முடியும்

## வவு.வடக்கு பிரதேச சபை

(குருமன்காடு)

வவுனியா வடக்கு உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை வழக்குமாறு வவுனியா வடக்கு பிரதேச சபை கோரியுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் புதிய வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பாக எல்லை நிர்ணயக் குழுவின் வரைவு அறிக்கை வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக மக்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை தேசிய எல்லை நிர்ணய குழு, அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம், கிருளவீதி, கொழும்பு-05 என்னும் முகவரிக்கும் பிரதிகளை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், வவுனியா மற்றும் செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி ஆகிய முகவரிகளுக்கு எதிர்வரும் 27 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வவுனியா வடக்கு பிரதே சசபை செயலாளர் கோரியுள்ளார்.

எல்லை நிர்ணய வட்டார விபரங்களை வவுனியா வடக்கு பிரதேச சபை நெடுங்கேணி அலுவலகத்திலும் கனராயன் குளம் பகுதியில் உள்ள உப அலுவலகத்திலும் நெடுங் கேணி நூலகத்திலும் நைனா மடு உப அலுவலகத்திலும் பார்வையிட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# உள்ளூர் துப்பாக்கி உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து தருமபுர பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து சட்ட விரோதமான முறையில் உள்ளூர் துப்பாக்கினை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து மூன்று உள்ளூர் துப்பாக்கிகள் மற்றும் அதன் உபகங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தேகநபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தரும்புர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (4-6-316)



**முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வன்னிவிளாங்குளம் அம்பாள்புரம் 6 ஆம் கட்டை பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சேவியர் கருணாரட்ணத்தின் (கிளி பாதர்) 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இடம்பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024

# தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்யும் விருச்சிக இராசி வாசகர்களே!**

தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் அதிகம் பெற்ற உங்களுக்கு இந்த சோபகிருது புத்தாண்டு செல்வச் செழிப்புடன் கூடிய வாழ்வை அமைத்துக் கொடுக்கப் போகின்றது. வாழ்க்கையில் வசதி வாய்ப்புகள் பெருகும். ஆண்டின் தொடக்கத்தில் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசியைப் பார்ப்பதால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். தொழில் முன்னேற்றமும் தொட்ட காரியங்களில் வெற்றியும் கிடைக்கும். "குரு பார்க்க கோடி நன்மை" என்பதால் ஆண்டின் தொடக்கம் உங்களுக்கு அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப் போகின்றது. தொடக்கத்தில் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கின்றது. கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்கிர இயக்கத்தில் மகர இராசிக்கு வந்து சில மாதங்கள் சஞ்சரித்து, அதன் பிறகு 20.12.2023 இல் மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கின்றார். இதன் விளைவாக குடும்பத்தில் சுபகாரியங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடை பெறலாம். பேச்சுத் திறத்தால் பெரும் லாபம் கிடைக்கும். இடையில் மூன்று முறை சனி, செவ்வாயின் பார்வை ஏற்படுகின்றது. உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் இதுபோன்ற நேரங்களில் கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது உடனிருப்பவர்களை அனுசரிப்பதும் தான் உயர்வுக்கு வழிகாட்டும்.

08.10.2023 இல் மீன இராசிக்கு ராகு செல்கின்றார். உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போகின்றார். இந்த கிரக மாற்றங்களின் அடிப்படையில் தான் உங்களுக்கு பலன்கள் அமையப் போகின்றது. உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்திகள் நடைபெற்றால் நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். தொழிலில் லாபம் குவியும். உத்தியோகம் உயர்நிலை அடையும். திசாபுத்தி பலமிழந்திருந்தால் யோக பலம் பெற்ற நாளில் உங்கள் எண்ணங்களை ஈடேற்றும் தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வரவேண்டும்.

**குருப்பெயர்ச்சி!**

சித்திரை 9 ஆம் திகதி (22.04.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். அவரது பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. குரு பார்க்கும் இடங்கள் அனைத்தும் புனிதமடைந்து நற்பலன்களை வழங்கும். அந்த அடிப்படையில் வாக்கு, தனம், குடும்பம் என்று சொல்லப்படும் இடத்தையும் தொழில் ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்தையும் குரு பகவான் பார்ப்பதால் திரண்ட செல்வம் உங்களைத் தேடிவரப் போகின்றது. 10 ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் கூட்டு முயற்சிகளில் இதுவரை வெற்றி கண்டுவந்த நீங்கள் இனிமேல் தனியாக செய்யும் முயற்சியிலும் தனலாபத்தை குவிக்கப் போகிறீர்கள். குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் ஊதிய உயர்வுடன் கூடிய இட மாற்றங்கள் வரலாம். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பர். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங் களும் எதிர்பார்த்த விதத்தில் வந்து சேரும். கும்பச்சனி ஆண்டின் தொட க்கத்தில் உங்கள் இராசிக்கு சுக ஸ்தான மான 4 ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 6, 10 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் ஜீவன ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே உத்தியோகத்தில் பணிச்சுமை கூடினாலும் அதை வெற்றிகரமாகச் செய்து முடித்துப் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை. அரசுப் பணிக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். செய் தொழில் எதுவாக இருந்தாலும் வருமானம் திருப்தி தரும். ஆனால் உடனுக்குடன் விரயங்களும் வந்து சேரும். வீடு கட்ட, வாகனம் வாங்கக் கடனுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் வந்து அலைமோதும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரமாக இருக்கிறார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாக பெயர்ச்சியாகிச் செல்கின்றார். மகரத்திலும் கும்பத்திலும் சனி சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சீராக இருக்கும். தாயின் உடல்நலம் சீராகும். சகோதர வர்க்கத்தினர் ஒரு சிலர் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுப்பர். அதனால் பாகப்பிரிவினைகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உங்களிடம் உள்ள பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். அதன் விளைவாக சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்கள் அது கிடைத்தால் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பெயர், புகழ் அதிகரிக்கும். குல தெய்வப் பிரார்த்தனைகளால் அதிகம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.




**ராகு-கேது பெயர்ச்சி!**

08.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப் போவதால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியம் நடை பெறப் போகின்றது. பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறலாம். "படிப்பிற்கேற்ற வேலை இல்லையே" என்று கவலைப்பட்டாலும், இப்பொழுது பொருத்தமான வேலை கிடைத்து நல்ல சம்பளமும் வந்து சேரும்.

பாகப்பிரி வினை மூலம் கிடைத்த சொத்துக் களை நல்ல விலைக்கு விற்று அதன் மூலம் வரும் வருமானத்தில் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். இக்காலத்தில் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை, உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து செய்து வந்தால் எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது, பொருளாதார்த்தில் முன்னேற்றத்தை வழங்குவார். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். வீடு கட்ட அல்லது கட்டிய வீட் டைப் பழுது பார்க்க நினைப்பவர்க ளுக்கு அது கைகூடும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற முன்வரு வீர்கள். வளர்ச்சிப் பாதைக்கு வித்திட கேதுவை வழிபடுவதோடு, விநாயகப் பெருமானையும் வழிபடுவது நல்லது.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

புத்தாண்டு உங்களுக்குப் பொன் கொழிக்கும் ஆண்டாக அமைய, சனிக்கிழமை தோறும் அனுமன் கவசம் பாடி அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்!**

இந்தப் புத்தாண்டு இனிய பலன்களை உங்களுக்கு வழங்கும் என்றாலும் உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. சிக்கனத்தை மேற்கொள்வது நல்லது. சுக ஸ்தானத்தில் சனி இருப்பதால் பெண்களின் சுபச்சடங்குகள், மணிவிழா, மணவிழாக்கள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பணிபுரியும் இடத்தில் வேலைப்பளு கூடுதலாக இருந்தாலும் அதற்கேற்ப சம்பள உயர்வும் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. உற்சாகத்தோடு செயற்பட்டு உயர்நிலை அடைய நல்ல சந்தர்ப்பங்களை வழங்கும் ஆண்டாக புது வருடம் அமையப் போகிறது.

**குரு-சனி வக்கிரம்!**

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் பண விடயத்தில் கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்பது தான் நல்லது. பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகும். அவர்களை நெறிப்படுத்துவது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியிலும், பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் கொஞ்சம் கவனத்தோடு செயற்பட வேண்டும். உடன்பிறப்புகளால் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். வாங்கிய கடனைக் கொடுக்க இயலாது. வளர்ச்சியில் வரும் குறுக்கீடுகள் அகல வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுக்கும்.

கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். ஆடம்பரச் செலவு களைக் குறைத்துக் கொள்வது நல் லது. அதிக தொகை கொடுத்து வாங் கிய பொருட்களைக் கையாளும் பொழுது கவனம் தேவை. வைத்திருக்கும் வாகனத்தை மாற்ற முன் வருவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 159





"வேண்டாம்! வேண்டாம்! நீயும் அவனும் எப்படியாவது போங்கள்! அவனைச் சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் கோட்டைக்குள் இப்போது தேடுகிறார்கள். வெளியிலும் சீக்கிரத்தில் தேடப் போகிறார்கள். அவனோடு சேர்ந்து போனால் எனக்கும் ஆபத்து வரும். நான் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லு!"

"வந்த காரியம் என்னவென்று நீ இன்னமும் தெரிவிக்கவில்லை"

"காஞ்சிக்கும் இலங்கைக்கும் ஆட்கள் போக ஏற்பாடாகி விட்டது. இலங்கைக்கு போகிறவர்கள் பாடு ரொம்பவும் கஷ்டம். அங்கே வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும்"

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னும் பொன் வேண்டுமா? உங்களுடைய பொன்னாசைக்கு எல்லையே கிடையாதா?"

"பொன் எங்களுடைய சொந்த உபயோகத்துக்கு அல்ல. எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத்தான். பின் எதற்காக உன்னை இங்கு விட்டு வைத்திருக்கிறோம்? இலங்கைக்குப் போகிறவர்களுக்குச் சோழ நாட்டுப் பொன் நாணயத்தினால் பயன் இல்லை இலங்கைப் பொன் இருந்தால் நல்லது" .

"இதைச் சொல்வதற்கு ஏன் இத்தனை நேரம்? நீ கேட்பதற்கு முன்பே நான் எடுத்து வைத்திருக்கிறேன்" என்று நந்தினி கூறி, தான் இருந்த மஞ்சத்தின் அடியில் குனிந்தாள். ஒரு பையை எடுத்து ரவிதாஸன் கையில் தந்தாள். "இது நிறைய இலங்கைப் பொற்காசு இருக்கிறது. எடுத்துக் கொண்டு போ! அவர் வரும் நேரமாகி விட்டது!" என்றாள்.

ரவிதாஸன் பையை வாங்கிக் கொண்டு புறப்பட்ட போது, "கொஞ்சம் பொறு! அந்த வாலிபனைக் கோட்டைக்கு வெளியிலாவது கொண்டு போய் விட்டு விடு! அப்புறம் அவன் வேறு பாதையில் போகட்டும்! சுரங்க வழியை அவனுக்கு காட்டிக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை!" என்று சொல்லி விட்டு எழுந்து நின்று, இருண்ட மாளிகைப் பக்கம் பார்த்தாள்.

அங்கே ஒன்றும் தெரியவில்லை விரல்களினால் சமிக்ஞை செய்தாள். இலேசாகக் கையைத் தட்டினாள் ஒன்றிலும் பலன் இல்லை.

அவளும் ரவிதாஸனும் லதா மண்டபப் பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றார்கள். அந்தப் பிரம்மாண்டமான இருள் மாளிகையில் அங்கிருந்து பிரவேசிக்கும் வாசலை நெருங்கினார்கள்.

ஆனால் வந்தியத்தேவனைக் காணவில்லை! சுற்றும் முற்றும் நாலாபுறத்திலும் அவனைக் காணவில்லை!

## முப்பத்தேழாம் அத்தியாயம்
## சிம்மங்கள் மோதின!

பழுவூர்ச் சகோதரர்கள் மீது தஞ்சை புரிவாசிகள் தனிப்பட்ட அபிமானம் வைத்திருந்தார்கள். அந்தப் பழைய நகருக்குப் புதிய பெருமையும் செல்வாக்கும் அளித்தவர்கள் பழுவேட்டரையர்கள் அல்லவா?

யானை, குதிரை, ஒட்டகைகளுடன் பவனி என்றால், எந்த நாளிலும் ஜனங்களுக்கு வேடிக்கை பார்ப்பதில் குதூகலந்தான். அதிலும் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தஞ்சையை விட்டு வெளியே போனாலும் சரி, வெளியே போயிருந்து கோட்டைக்குள் பிரவேசித்தாலும் சரி, வீதியின் இருபுறங்களிலும் ஜனங்கள் திரண்டு நின்று வேடிக்கை பார்ப்பார்கள். ஜயகோஷம் செய்வார்கள். வாழ்த்துக் கூறுவார்கள். பூமாரியும் பொரி மழையும் பொழிவார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒன்றுபட்டால் உண்டு



ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான். "யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா?" என்றான்.

"தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்!" என்றார்.

"இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை!" என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்த அறிஞர் குரங்காக மாறி விட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பாக்தாத் பட்டணத்திற்குப் புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

"குரங்கை வெளியே அனுப்புங்கள் கொன்று விடுங்கள்!" என்று கத்தினர். கப்பலின் தலைவன் அந்த விலங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

"வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!"

அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்து விட்டதாகவும், அரசர் அந்த இடத்திற்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுக்க விரும்புவதாகவும் அறிவித்திருந்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும் மற்றவர்களும் நகைத்தனர். "இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்!" என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச்சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுபூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.

"எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆகமுடியும்?" என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்கு தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

நீதி: அறிவுடையோர் எவ்வுருவில் இருந்தாலும் மதிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

*~ சிம்மன்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கல்வி அத்தியாவசியம் இல்லை என்றுரைப்பது முறையோ

கல்வியை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்வதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேற்போந்த தீர்மானத்துக்கு ஒரு சில ஆசிரிய தொழிற்சங்கங்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கமும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இவர்களின் எதிர்ப்புக் கண்டு அதிர்ச்சியடையாமல் இருக்கமுடியவில்லை.

கல்வியை அத்தியாவசிய சேவைக்குள் அகப்படுத்தி விட்டால், பாடசாலைகளில் இடம்பெறும் பணிப்புறக்கணிப்புக்கள், விடைத்தாள் திருத்தமாட்டோம் என்ற மறுப்புகள் முடிவுக்கு வந்துவிடும் என்பது அரசாங்கத்தின் கணிப்பு.

எனினும் புத்திஜீவிகள் என்று மதிக்கப்படக்கூடிய பல்கலைக்கழக விரிவுரயாளர் சங்கத்தினரும் எழுத்தறிவித்தவன் இறைவன் என்று போற்றப்படும் ஆசிரியர்களை உள்ளடக்கிய ஒரு சில ஆசிரிய தொழிற்சங்கங்களும் கல்வியை அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த எதிர்ப்பானது, எந்தவகையிலும் நியாயத்துவமற்றதாகும்.

***பிச்சை புகினும் கற்கை நன்றே*** என்று கல்வியின் முக்கியத்துவத்தை நறுந்தொகை எடுத்தியம்புகிறது.

இதேபோல அன்னசத்திரங்கள், ஆலயங்கள், நீர்த்தடாகங்கள், நறுமலர்த் தோட்டங்கள் அமைப்பதிலும் பார்க்க, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் அன்னையாவினும் புண்ணியம் கோடி என்றான் பாரதி.

ஆக, கல்வி என்பது மிகவும் அத்தியாவசியமானது. மனித குலத்தை பேராபத்துக்களில் இருந்து பாதுகாப்பது முதல் உலக நாடுகளிடையேயான அத்தனை தொடர்பாடல்கள் போக்குவரத்துக்கள் என யாவும் கல்வியின் அறுவடையாகும்.

கல்வி இல்லாதிருக்குமாயின், மக்கள் மாக்களாகவே வாழ்ந்திருப்பர்.

ஆம், மனிதவாழ்வியலின் உன்னதமான பயணத்துக்கான பாதையை கல்வியே அமைத்துக் கொடுத்தது.

அன்றைய ஆசான்கள் கல்வியை ஈகை செய்ததாலேயே இன்றைய தலைமுறை தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது.

உண்மையில் தங்களின் சொந்தக் காணியில் பாடசாலை கட்டியவர்கள், பாடசாலைகளை அமைப்பதற்காக தங்கள் வாழ்நாள் முழுவதிலும் உழைத்த பெரியவர்கள்.

வீடுகளில் முடங்கிக் கிடந்த பிள்ளைகளை அழைத்து வந்து பள்ளிகளில் இருத்தி, பாடம் கற்பித்து எங்கள் மனித சந்ததி வாழ வேண்டும் என்று நினைத்த உத்தமர்கள்.

இன்றும் பாடசாலை மாணவர்கள் கற்க வேண்டும் என்பதற்காக, கோடிக்கணக்கான பணத்தை கல்வி அபிவிருத்திக்காக செலவிடுகின்ற பரோபகாரிகள்.

இப்படியாக முடிசார்ந்த மன்னர் முதல், சாமானிய பிரஜைவரை கல்விக்காகச் செய்த அர்ப்பணிப்புகள் கொஞ்சமல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், விடைத்தாள்களைத் திருத்துவதற்கு பின்னடிக்கின்ற மனநிலை கல்வியாளர்களிடம் இருக்குமாயின், அதைவிட கொடுமை வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே சம்பள உயர்வுக்காக – வருமான வரியில் இருந்து விலக்குப் பெறுவதற்காக கல்வியை அத்தியாவசிய சேவைக்குள் சேர்க்கலாகாது என ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் கூறினால் அது அவர்கள் தாம் கற்ற கல்விக்குச் செய்கின்ற துரோகமாகும்.

## நல்லூரில் விடுதி ஒன்றினுள் அத்து மீறி நுழைந்து தாக்குதல்

### கணவன் மனைவி உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள விடுதி ஒன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டு விடுதி உரிமையாளர் மீது சாணித்தண்ணீர் ஊற்றி தாக்குதல் நடத்தியமை தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணவன் மனைவி உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நல்லூர் பகுதியில் உள்ள விடுதிக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 03 பெண்கள் உள்ளிட்ட 07 பேர் கொண்ட கும்பல் கார் ஒன்றில் வந்து இறங்கி விடுதி மீது தாக்குதல் மேற்கொண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டு உள்ளதாகவும், கண்காணிப்பு கமரா கட்டுப்பாட்டு தொகுதியை உடைத்து தம்முடன் எடுத்து சென்றுள்ளதாகவும் விடுதி உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் தாக்குதலுடன் தொடர்புடைய கணவன் மனைவி உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். (ம-7,9,33,104)

## நாட்டின் தலைமையின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது

### ஈஸ்டர் தாக்குதல் அஞ்சலியில் கொழும்பு பேராயர்

(கொழும்பு)

நாட்டின் தற்போதய தலைமைத்துவத்தில் நம்பிக்கை கொள்ள முடியாது என கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதலின் 4ம் ஆண்டு அஞ்சலி நிகழ்வின் பின்னர், கொழும்பு பேராயர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களமும் பொலிஸாரும் தயக்கம் காட்டி, பகிரங்கமாக முதலைக் கண்ணீர் சிந்துவதாகவும் நேர்மையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குவது வேதனையளிப்பதாகவும் கொழும்பு பேராயர் குறிப்பிட்டார்.

அரசதரப்பின் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் இடையிலான இடைவெளி தெளிவாக புலப்படுவதாகவும் கத்தோலிக்க திருச்சபையுடன் நேர்மையான பேச்சுவார்த்தைக்கு தயார் என அண்மையில் அறிவித்த தற்போதைய ஜனாதிபதியும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் இரட்டைக்கொள்கையை கடைப்பிடிக்கின்றார்களா என்ற கேள்வி தமக்குள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்களின் சுதந்திரதையும் ஜனநாயகத்தையும் மனித மேன்மையையும் அழித்து, ஏகாதிபத்தியத்துடன் மக்களின் இறையாண்மையை எட்டி உதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாட்டின் தலைமையின் மீது இன்று நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளதாக பேராயர் மேலும் குறிப்பிட்டார். (ம-7,9)

## வவுனியாவில் காற்றுடன் மழை

## 4 குடும்பங்களை சேர்ந்த 12 பேர் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கில் காற்றுடன் கூடிய மழை காரணமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடும் வெப்ப நிலை நீடித்து வருவதுடன், அவ்வப்போது மாலை வேளைகளில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகின்றது.

அந்தவகையில், நேற்று முன்தினம் மாலை வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் மழை பெய்தது. இதன் காரணமாக வவுனியா மாவட்டத்தின் ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், சேனைப்புலவு கிராம அலுவலர் பிரிவில் கடையுடன் கூடிய வீடு ஒன்று சேதமடைந்துள்ளதுடன், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பாதிப்படைந்துள்ளனர். இதன்படி வவுனியா வடக்கில் மொத்தமாக 4 குடும்பங்களைச்சேர்ந்த 12 பேர் பாதிப்படைந்துள்ளனர். (ம-7,9)

## ஊரெழுவில் வீடு புகுந்து வன்முறை கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று வீட்டில் இருந்த உடமைகளை அடித்து உடைத்து சேதம் ஏற்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

குறித்த வீட்டினுள் நேற்று முன்தினம்(வியாழக்கிழமை) இரவு வேளை மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 இற்கும் மேற்பட்ட வன்முறை கும்பல் வீட்டின் யன்னல் கண்ணாடிகள், கதவுகள், வீட்டில் இருந்த உடைமைகள் என்பவற்றை அடித்து நொறுக்கி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலாளிகள் தங்கள் முகங்களை மறைத்து முகமூடிகளை அணிந்து இருந்ததாகவும், தாக்குதலினால் 02 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் வீட்டார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9)

### உயர்தரப் பரீட்சை

## விடைத்தாள் திருத்தும் முதற்கட்ட பணி ஆரம்பம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்து சமயம், கிறிஸ்தவம், இந்து நாகரிகம், பரதநாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேற்கத்திய சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் மற்றும் ஹிந்தி ஆகிய பாடங்களுக்கான பணிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய நகரங்களை அண்மித்து காணப்படும் விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூல பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான விண்ணப்பங்கள் போதிய அளவில் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், அந்தப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப் பட்டு வருகின்றதெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ம-7,9)

## சிலாபத்தில் மனைவியை கடத்திய கணவன்

(சிலாபம்)

சிலாபத்தில் இளம் மனைவியை கடத்திச் சென்ற கணவன் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹலவத்த பகுதியில் கணவனுடன் முரண்பட்டுக் கொண்டு தாயின் வீட்டுக்கு சென்ற 18 வயதான இளம் மனைவி 19 வயது கணவனால் கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த கடத்தல் சம்பவம் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றுள்ளதுடன், குறித்த மனைவியின் கணவர் உட்பட ஐவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட பெண் ஹலவத்த பிரதேசத்தில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் கல்வி கற்றபோது, இளைஞன் ஒருவருடன் காதல் உறவு கொண்டிருந்தார்.

வீட்டில் வந்து தங்கியிருந்த மனைவியை, அவரது கணவர் மற்றும் சிலர் வந்து கடத்திச் சென்றுள்ளனர். தாயை தாக்கிவிட்டு திருமணமான பெண் கடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்(ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு

## நீங்கா நினைவலைகள்

## சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் BA. MA

சைவசித்தாந்த பண்டிதர், பாலசோதிட சிந்தாமணி, அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் தலைவர், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன், தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்



அன்னை மடியில்
1963.04.24

ஆண்டவன் அடியில்
2021.05.14

தங்கியிருந்த தாயின் கருவறை
புனிதமானது அதேபோல்
நாம் விழும்போது தாங்கிக் கொண்ட
அப்பாவின் தோள்களும் புனிதமானது

குழந்தையாக இருந்த பொழுது
உம்மை இறுக கட்டியணைத்தபடி
உம் அரவணைப்பிலும்
பாதுகாப்பிலும் வாழ்ந்த - அந்த
நாட்கள் மீண்டும் வராதா
என்று எம் இதயம் ஏங்குகின்றது அப்பா!

தன் மூச்சு உள்ளவரை
எமக்காக நேசித்தவர்
எமக்காகத்தான் சுவாசிப்பவர்
எம் அப்பா மட்டுமே!

செதுக்கப்பட்ட ஒவ்வொரு
சிலையும் கடவுள் என்றால்
எமக்கு அப்பாவும் கடவுள் தான்
அடித்தாலும் அன்பால் அணைக்கும்
கடவுள் எம் அப்பாவே.



குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-6406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணவீக்கம்...

மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின் படி, மார்ச் மாதத்தின் உணவுப் பணவீக்கம் 42.3 மூன்று வீதமாகக் குறைவடைந்துள்ளது. (ம-7,9)

## புதுக்குடியிருப்...

பகுதியில் இருந்து வந்த கன்டர் வாகனம் வீதியை கடக்க முற்பட்ட உந்துருளியில் பயணித்தவரை மோதித் தள்ளியுள்ளது. விபத்திற்குள்ளான உந்துருளி தீ பற்றி எரிந்துள்ளது.

காயமடைந்த குடும்பஸ்தர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,9)

## திடீர் சுகவீனம்...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த துரைராஜா சேனுகா (வயது-12) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

சிறுமிக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து கொழும்பு மகரகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,9,316)

## பல்தேசிய நிறு...

நேற்று முன்தினம் நடைபெற்ற பிஸ்னஸ் டுடே விருது வழங்கல் நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் இரு வருடங்களுக்கு முன்னதாக இறுதியாக சந்தித்திருந்த சந்தர்ப்பத்தில் கடுமையான நெருக்கடிகளுடன் கூடிய இரு வருடங்களின் பின்னரான சந்திப்பு எவ்வாறு அமைந்திருக்கும் என கணிக்க முடியாமல் இருந்திருந்தாலும் தற்போது நாம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குரிய பாதைக்குள் பிரவேசித்துள்ளோம்.

இருப்பினும் ஸ்திரமானதும் அபிவிருத்தியை நோக்கி நகர்வதுமான பொருளாதார கட்டமைப்பை உருவாக்க நாம் நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கும்.

வொஷிங்டனில் நடைபெற்ற வசந்த கால அமர்வுகளில் பங்கேற்கச் சென்றிருந்த இராஜாங்க அமைச்சரும் மத்திய வங்கியின் ஆளுநரும் பல்தேசிய நிறுவனங்கள் நமக்கு உதவ முன்வந்துள்ளது என்ற நற்செய்தியுடன் இந் நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்" என்றார். (ம-7,9)

## அனைவரது...

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள ஏனைய சட்டமூலங்கள் தொடர்பாக மல்வத்து விகாரை மகாநாயக்கர் திப்பட்டுவே சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்துவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை கண்டிக்கு சென்றிருந்தார்.

இதன்போதே மேற்படி விடயத்தை மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர்;

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகளில் எமது நாட்டிலும் பார்க்க மிகவும் வலுவான பயங்கரவாத தடுப்புச் சட்டம் இருந்து வருகிறது. என்றாலும், சில வெளிநாடுகள் மனித உரிமையை பாதுகாக்கும் முறையை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக எமக்கு கற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன.

உலகிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளின் அடிப்படையில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக தொழிற்சங்கங்களின் உரிமைகள், ஊடக உரிமைகள், போராட்டங்கள் போன்றவை அடக்கப்படுவதாக தெரிவித்து, சிலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர். என்றாலும், புதிய சட்டமூலம் தொடர்பாக விமர்சிப்பவர்கள், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் எதனையும் முன்வைப்பதில்லை.

அத்துடன், உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முன்வைப்பதன் பிரதான நோக்கமாக இருப்பது, மக்களின் வாழ்க்கை தொழில்களின் உரிமை மற்றும் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மையை பாதுகாப்பதற்காகும்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வெளிநாடுகளில் திட்டமிடப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளல் மற்றும் கூட்டுப் பாலியல் துஷ்பிரயோக குற்றச் செயல்களுக்காகவும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுகிறது.

மேலும், பல்வேறு தரப்பினரும் பல்வேறு வழிகளில் நாட்டை அழிக்க முயற்சிக்கின்றனர். அதற்காக எந்த சந்தர்ப்பத்தையும் வழங்கப்போவதில்லை. இனங்களுக்கிடையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்துக்கு தேவையாக இருக்கிறது.

அதேபோன்று மகாநாயக்க தேரர்கள் உட்பட அனைவரதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை கருத்திற் கொண்டு புதிய பயங்கரவாத சட்ட மூலத்துக்கான திருத்தங்களை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அனைவரதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை கருத்திற்கொண்டு இந்த சட்டமூலத்தை அனுமதிப்பது பொருத்தம் என மகாநாயக்க தேரர்கள் உபதேசித்தார்கள் என்றார். (ம-7,9)

## புதிய பயங்கர...

அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளான பிரஜைகளின் சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை மற்றும் அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை என்பன குறித்த சட்ட மூலத்தின் சில சரத்துக்களால் இரத்து செய்யப்பட்டமைக்கு இலங்கை சமூகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் காரணமாக நிபுணர் குழு மூலம் இந்த சட்டமூலத்தில் உள்ள பொருத்தமற்ற சரத்துகளை நீக்குவது பொருத்தமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## உயிர்...

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பலியானவர்களின் 4 ஆவது ஆண்டு நினைவு தின விசேட ஆராதனைகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது. (ம-7,9)

## நீதிக்காக...

களின் உறவுகள் மற்றும் அந்த சமூகத்தை சேர்ந்தவர்களை அமெரிக்கா கௌரவிக்கின்றது. நீதிக்காக காத்திருப்பவர்களிற்கு ஆதரவை வெளியிடுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் நான்குவருடங்களிற்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரமான சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து அமெரிக்கர்கள் உட்பட அப்பாவி பொதுமக்களை நான் நினைவுகூருகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1548
வெற்றி இலக்கங்கள்
தனுசு 0 8 4 3 7 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1123
B 02 14 32 34
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 3335
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 14 48 65 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1441
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
Q 21 04 06 46 58

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 402
வெற்றி இலக்கங்கள்
மகரம் 24 41 48 58 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/21
சீட்டிழுப்பு இலக்கம் 5093
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
V 1 8 1 5 0 4
தேசிய லொத்தர் சபை

வெள்ளிக்கிழமை
அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல : 1893
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,911,180/-
வெற்றி இலக்கங்கள்
21 39 43 56 O
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 14 21 28 45 72
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1243
சீட்டிழுப்பு திகதி 2023.04.21 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 324,374,123.40
DLB DEVELOPMENT LOTTERIES
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,404,955.60
வெற்றி இலக்கங்கள் சிம்மம்
08 16 19 22
திகதி 2023-04-21
வெற்றி வாரம் 3779
வர்ணம் கரும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,502,700/-
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 314
சீட்டிழுப்பு திகதி 2023.04.21 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 19 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,872,280/-
DLB

வெள்ளிக்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2023.04.21
சீட்டிழுப்பு இல : 4228
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,378,900/-
வெற்றி இலக்கங்கள்
06 25 71 72 B
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2067
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.04.21
தினம் வெள்ளிக்கிழமை
O 31 43 45 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,257,420/-
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IELTS - New Batch** ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
077 798 9830 By:- B.MURALI (15283)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## பெண் பணியாளர் தேவை

மந்துவில்,கொடிகாமத்தில்
இயங்கும் Fancy கடை ஒன்றிற்கு
பெண் பணியாளர் தேவை.
மேற்குறித்த முகவரிக்கு அருகில்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை. (C-6398)

**077 811 8948**

## காணிகள் விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் காணிகள் விற்பனைக்குண்டு.பருத்தித்துறை வீதியில் 4 பரப்பு,வைமன்வீதியில் 3 பரப்பு 15 குளி, கோவில் வீதியில் 2 பரப்பு,1 3/4பரப்பு,1 1/2 பரப்பு வீட்டுடன்,மேலும் பல காணிகள் விற்பனைக்கு.காணி வீடு வாங்கவும் விற்கவும் நேரடித் தொடர்புகளுக்கு சலுகை உண்டு. (C-6402)

ராஜா சொத்து விற்பனை நிறுவனம்

**077 603 3259**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15327)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15185)

**077 814 7389, 077 986 5457**

## படி வாகனம் விற்பனைக்கு

PY-XXXX எனும் தொடர் இலக்கத்தைக் கொண்ட படி ரக வாகனம் (அலுமினிய பொடியுடன்) உடன் விற்பனைக்குண்டு. (15325)

**070 521 2138**

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (15289)

**077 367 1062**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகர், கச்சேரி, நல்லூர், அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை (15330)

**077 839 5849**

## English Classes

Gr 1 to O/L

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன

**Let's Learn**

- Grammar
- School Syllabus
- Spoken
- Monthly Exams
- Writing Skills

வீடு வந்து கற்பிக்கப்படும் (15348)

ஓட்டுமடம்

**077 331 4608**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15311)

**076 755 8606**
**077 638 5683**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.** (15311)

**077 076 0389**
**076 911 9371**
**076 739 0413**


# மரண அறிவித்தல்



தோற்றம் 12 - 12 - 1950

மறைவு 19 - 04 - 2023

## பொன்னம்பலம் ஜெகநாதன்

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 54, K.K.S.வீதி, கொக்குவில் மற்றும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் ஜெகநாதன் அவர்கள் 19.04.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானஉதயமலரின் அன்புக் கணவரும் நர்மதா (பிரான்ஸ்), நிவேதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் குகவண்ணன் (பிரான்ஸ்), அர்ஜுன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராமஜெயம் (லண்டன்), காலஞ்சென்ற தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபாலசிங்கம், சந்திரா, தணிகாசலம்பிள்ளை, தவயோகராசா, வீரகத்திப்பிள்ளை, காலஞ்சென்ற சங்கரநாதன் மற்றும் நவகுணநாதன், விக்கினேஸ்வரன், ஜெயகுணதேவி, மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனரும் ஜனார்த்தனன், ஆதவன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(15332)

*தகவல்:* குடும்பத்தினர்
**077 104 3538, 076 466 6602**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.